## திராவிடத்தால் வாழ்கிறோம்

1154

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்





- வாழ்வோம்

## மாநாடு

ர.பிரகாசு

108

**திராவிட இயக்கம் பயன்படுத்தும் ஆயுதங்களில் மிக முக்கியமானது, மாநாடு. அந்த மாநாடுகளின் வரலாற்றை வாரம் ஒன்றாக வாசிப்போம்...**




ஓவியம் : சிகரன்

# தமிழ்நாட்டில் ஏற்பட்ட முதல் மனப்புரட்சி!

12.12.1937 அன்று 'நாமக்கல் தாலுகா சுயமரியாதை மாநாடு' அங்குள்ள தியேட்டர் ஒன்றில் நடைபெற்றது. அன்று காலை 8 மணிக்கு வெங்கிடுபதி முதலியார் இல்லத்தில் இருந்து மேளதாளங்கள் முழங்க ஊர்வலம் புறப்பட்டது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, கே.எம்.பாலசுப்பிரமணியம், பார்த்தசாரதி, பொன்னம்பலனார் உட்பட ஆயிரக்கணக்கானோர் ஊர்வலத்தில் பங்கேற்றனர். கடைவீதி வழியாக ஊர்வலம் சென்றபோது, சுயமரியாதை இயக்கக் கொள்கை முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன. கொள்கை விளக்கத்தட்டிகள், தலைவர்கள் பெயர்கள் எழுதப்பட்ட வளைவுகள், பச்சிலைத் தோரணங்கள் நகரை விழாக்கோலம் அடையச் செய்திருந்தன.

ஊர்வலம் கல்மண்டபம் பகுதியை அடைந்தபோது, கொடியேற்று விழா நடைபெற்றது. ஜோலார்பேட்டை பார்த்தசாரதி கொடியேற்றி வைத்து, சுயமரியாதை இயக்கத்தின் பெருமைகளையும் அதன் வேலைத்திட்டங்களையும் கூடியிருந்த மக்களுக்கு எடுத்துரைத்தார். ஏற்கனவே இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் மாநாட்டுப் பந்தலில் குழுமியிருந்தனர். ஊர்வலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் வந்ததால், மாநாட்டு அரங்கு நிரம்பி காணப் பட்டது. தொடக்கத்தில் சிலர் பாடல்கள் பாடி, மக்களை உற்சாகப்படுத்தினர். அடுத்து, மாரிமுத்து என்பவர் வரவேற்புரையாற்றினார்.

மாநாட்டைத் திறந்துவைத்த கே.எம். பாலசுப்பிரமணியம், சுயமரியாதை இயக்கத்தின் தோற்றம், அப்போது ஆற்றிவந்த பணிகளை எடுத்துச்சொல்லி, அடுத்து எடுத்துக்கொள்ள வேண்டிய கடமைகள் குறித்தும் முக்கால் மணி நேரம் பேசினார். அதனையடுத்து, வெங்கிடுபதி, அ.பொன்னம்பலனார், சித்தைய்யா, தந்தை பெரியார் ஆகியோர் முன்மொழிய மாநாட்டுக்கு தலைமையேற்றார் அண்ணா. அந்தக் காலகட்டத்திலேயே தனது உரையில் பேச வேண்டிய கருத்துகளை எழுதி, அச்சடித்துக்கொண்டு வந்து உரையாற்றி உள்ளார் என்ற செய்தி 'விடுதலை' இதழில் பதிவாகியுள்ளது.

"சுயமரியாதை இயக்கம் தோன்றுவதற்கு முன்பு, இந்த நாட்டிலே எத்தனையோ இயக்கங்கள், கிளர்ச்சிகள், கட்சிகள் இருந்துவந்தன. அவற்றில் பல மாண்டன. சில உருமாறிவிட்டன. மற்றும் சில நாதியற்றுப்போய்விட்டன. நம் நாட்டிலே தோன்றிய சில கிளர்ச்சிகளிலே சில அரசியல் நோக்குடையன. வேறு பல, மத, சமுதாய சீர்திருத்தக்குறி கொண்டன. ஆனால், எந்த இயக்கமும் அரசியலது அன்றி சமுதாயத்துறையினது ஆயினும் அவைகளிடையே ஒரு பொது நோக்கம் காணக் கிடைக்கும். அது என்னவெனில், பழைமையில் ஆர்வம். நமது இயக்கம் தோன்றிதான் சமூகம் புதுப்பிக்கப்பட வேண்டுமானால், இந்தப் பழைமை அழிக்கப்பட வேண்டும் என்பதையும், அச்சம், தயவு தாட்சணியமின்றி எடுத்துக்காட்டியது. இதுவே தமிழ்நாட்டில் ஏற்பட்ட முதல் மனப்புரட்சி" என்றும் "வருணா சிரமப் படிநிலைகள் தமிழ்ச்சமூகத்தை எப்படி கூறு போடுகின்றன" என்றும், "அதை வெடிவைத்து தகர்த்து மானுட சமத்துவத்தை மலரச்செய்வதே சுயமரியாதை இயக்கத்தின் நோக்கம்" என்பதையும், சுமார் ஒன்றரை மணி நேரம் ஆய்வுரையாக நிகழ்த்தினார் அண்ணா.

அதன்பிறகு, பொன்னம்பலனார் ஒரு மணி நேரம் உரையாற்றினார். மதிய உணவுக்குப் பிறகு மீண்டும் 3 மணிக்கு மாநாடு கூடியது. ஆனால், மக்களோ 2 மணிக்கே மீண்டும் கொட்டகைக்குள் வந்து அமர்ந்துவிட்டனர். மீண்டும் சிலர் பாடல்களைப் பாடி புத்துணர்ச்சி ஏற்படுத்த, பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அதன்பிறகு, பெரியாரின் நீண்ட உரையுடன் மாலை 5 மணிக்கு மாநாடு முடிவுற்றது. பின்னர், வெங்கிடுபதி முதலியார் இல்லத்தில் தலைவர்களுக்கு சிற்றுண்டி வழங்கப்பட்டது. பின்னர் மலைக்கோட்டை அடிவாரத்தில், பொதுக்கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

...கூட்டம் திரளும்

## டிஜிட்டல் சாதனைக்கு இலக்கு!

2026 கழகத்தின் தேர்தல் அறிக்கையில், தமிழ்நாடு தகவல் தொழில்நுட்பத்துறை - ஐ.டி. துறை (IT) ஏற்றுமதியை ரூ.2.5 லட்சம் கோடியில் இருந்து, ரூ.5 லட்சம் கோடியாக உயர்த்துவது குறித்த வாக்குறுதிக்கு, சமூக வலைதளத்தில் கருத்து பகிர்ந்துள்ளார் சைபர் பாதுகாப்பு நிபுணர் விமலாதித்தன் மணி. அவரது பதிவிலிருந்து... "அடுத்த ஐந்து ஆண்டுகளில் ஐ.டி. ஏற்றுமதியை ரூ.5 லட்சம் கோடியாக இரட்டிப்பாக்குவது, சாதாரண வளர்ச்சி நடவடிக்கைகளால் அடைய முடியாது. இதற்கு மிகவும் நன்றாகத் திட்டமிட்ட, பன்முக அணுகுமுறையுடன்கூடிய விரைவு செயலாக்கம் தேவை. உலகளாவிய திறன் மையங்கள் (GCCs), செயற்கை நுண்ணறிவு (AI), தரவுப் பொறியியல், தயாரிப்பு மேம்பாடு (Product Engineering), ஆழ்ந்த தொழில்நுட்ப வடிவமைப்பு போன்ற துறைகளில் நிறைய வெளிநாட்டு முதலீடுகளை ஈர்க்க வேண்டும். இந்த ஐ.டி. சேவைகள் அதிக ஏற்றுமதி மதிப்பை உருவாக்கும் திறன் கொண்டவை.

சென்னை மட்டுமல்லாமல், கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி, ஓசூர் போன்ற இரண்டாம் கட்ட நகரங்களை, ஐ.டி. துறை - IT வளர்ச்சியின் அடுத்த கேந்திரங்களாக மாற்ற வேண்டும். நல்ல உட்கட்டமைப்பு கொண்ட ஐ.டி. துறை - IT பூங்காக்கள், போக்குவரத்து வசதிகள், விமான இணைப்புகள் மற்றும் நல்ல கட்டமைப்பு கொண்ட துணை நகரங்கள் உருவாக்கப்பட வேண்டும். இது புதிய முதலீடுகளை விரைவாக ஈர்க்க உதவும்.

உயர்தரமான இணைய இணைப்பு, 5G, மின்சாரம் மற்றும் தரவு மையங்கள் (Data Centers) மிகவும் அவசியம். ஒளிக்கோடு (fibre) அமைப்புகள், தொலைத்தொடர்பு அனுமதிகள் மற்றும் மின்சார வழங்கலில் காலக்கெடுவுடன்கூடிய ஒப்புதல்கள் வழங்கப்பட வேண்டும்.

தற்போது, தமிழ்நாடு கொடுக்கும் பாரம்பரிய ஐ.டி. துறை - IT சேவைகளுக்கு அப்பால், Data Centers, AI, Cloud Computing, Chip Design, Embedded Systems, AVGC (Animation, Visual Effects, Gaming, Comics) போன்ற ஐ.டி. துறை IT சேவைகள் புதிய ஏற்றுமதி வாய்ப்புகளாக மாற வேண்டும்" என விரிவாக விளக்கியுள்ளார்.

திராவிட மாடல் 2.0 அரசில் இந்த வாக்குறுதி சாத்தியமாகும் நாளில், தமிழ்நாட்டின் அடையாளம் உலக நாடுகளுக்கு இணையாக இருக்கும் என்றால் மிகையில்லை.

## ஃப்ளாஷ்பேக்



### பதிப்பகங்களுக்கும் விருது வழங்கிய கலைஞர்!



எம்.சேகர்

2009-ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசின் சார்பில், சிறந்த பதிப்பகத்திற்கும், சிறந்த நூல்களுக்கும் விருது வழங்கும் விழா, திருவள்ளுவர் தினத்தன்று நடைபெற்றது. பாவை பப்ளிகேஷன்ஸ் சிறந்த பதிப்பகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் முன்னிலையில், பேராசிரியர் அவர்கள் கையால் விருதுபெற்ற மகிழ்ச்சியான தருணம். கலைஞர் முதலமைச்சராக இருந்தபோதெல்லாம், சிறந்த பதிப்பகங்களுக்கும் விருதுகளை வழங்கி சிறப்பித்துள்ளார்.

- எம்.சேகர், செம்பனூர்.


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## பாசறை படிப்பறை

கௌதம் ராஜ்

108

**சுயமரியாதை-சமத்துவம்- சமூக நீதி நிரம்பிய உலகைப் படிக்க, படைக்க அவசியமான புத்தகங்களை வாரந்தோறும் அறிமுகம் செய்கிறது இந்தப் பகுதி...**




# தமிழ்நாட்டுத் தேர்தல்களின் 'சூப்பர் ஸ்டார்'!

தி.மு.கழகம் தேர்தல் அரசியலுக்குள் நுழையும் முன்பே, தனது கொள்கைகளை அறிக்கையாக வெளியிட்டு, அதை ஆதரித்து கையெழுத்திடும் அனைவருக்கும் வாக்கு சேகரித்த பெருமைக்குரியது. அந்த வகையில், 1952 -ஆம் ஆண்டு முதலே தேர்தல் அறிக்கை என்ற வடிவத்தை, தமிழ்நாட்டில் அறிமுகப் படுத்தியது தி.மு.கழகம்தான். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வார்த்தைகளில் சொல்வதென்றால், "இந்தியாவிலேயே தி.மு.க.தான் தேர்தல் அறிக்கையை, மக்கள் முன்னால் வைத்து, அவர்களின் ஆதரவைக் கோரி, தேர்தல் களத்தில் இறங்குகிற முறையை உருவாக்கிய முதல் இயக்கம்; பத்திரிகை நிருபர்களிடம் மட்டும் தந்து விட்டு, தேர்தல் அறிக்கையை வெளியிட்டு விட்டதாகக் கூறும் இயக்கம் அல்ல."

2026 சட்டமன்றத் தேர்தல் அறிக்கையை, 'சூப்பர் ஸ்டார்' என்று குறிப்பிட்டு, வெளியிட்ட நிலையில், அது மக்களிடையே மிகுந்த வரவேற்பை பெற்று வருகிறது. அந்த வகையில், இதுவரை வெளிவந்த தேர்தல் அறிக்கைகள் பற்றிய அறிமுகம் நம் அனைவருக்குமே தேவைப்படுகிறது. இந்தத் தேவையை நிகர் செய்ய 2009-ஆம் ஆண்டு, தி.மு.கழகத்தின் மணிவிழாவின் போது பொ.தங்கபாண்டியன் அவர்களால் தொகுத்து வெளியிடப்பட்ட மகத்தான ஆவணம் 'திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கைகள் - 1952 முதல் 2006 வரையிலான வரலாற்று ஆவணங்கள்' என்ற நூல். நாளந்தா பதிப்பகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

1957-ஆம் ஆண்டு, பொதுத் தேர்தல் சமயத்தில் தி.மு.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் 'ஐந்தாண்டு திட்ட அநீதி ஒழிய வேண்டும்' என்ற முழக்கம் எழுப்பப்பட்டி ருந்தது, திட்டக்குழு, வட இந்திய மாநிலங்களுக்கும் முதலாளிகளுக்கும் சார்பான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறது எனவும், திராவிட நாட்டுக்கு உருப்படியான திட்டங்கள் எதையும் வரவிடாமல் இக்குழு தடுப்பதாகவும், இதனால் திட்டக் குழு என்பது ஒழிக்கப்பட்டு, அந்தப் பொறுப்பை மாநில அரசுகளே தீர்மானித்துக் கொள்ளும் வண்ணம், மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று தேர்தல் அறிக்கை சுட்டிக் காட்டியது.

இது போல் ஒவ்வொரு தேர்தல் அறிக்கையிலும் பல தனித்துவங்கள் அல்லது முத்திரைத் திட்டங்கள் அல்லது கோரிக்கைகள் இடம்பெற்றிருந்தன. அவை தொண்டர்களுக்கும் மக்களுக்கும் எளிதில் புரியும் வண்ணம் விளக்கப் படங்களுடன் எழுதி பரப்பப்பட்டது. 1967-இல் ஆட்சி பொறுப்பேற்ற தி.மு.கழகம், ஆட்சியிலிருந்த அனுபவத்தில் ஒன்றிய - மாநில அரசுகளுக்கு இடையிலான முரண்பாட்டை, மாநில அரசு சந்தித்து வரும் அதிகார போதாமையை உணர்ந்தது. அதனால், 1971-ஆம் ஆண்டு, தேர்தல் அறிக்கையில் அதிகார பரவலாக்கம் முதன்மை கோரிக்கையாக முன்வைக்கப்பட்டது. இப்படி காலத்திற்கேற்ற மாற்றங்களும் கோரிக்கைகளும் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றன.

2026 சட்டமன்றத் தேர்தலுக்கான அறிக்கையில் தமிழ்நாட்டின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கான அடித்தளம் எப்படியான ஒன்றாக இருக்கும் என்பது உறுதிப்பட்டுள்ளது. காலம் காலமாகத் தமிழ்நாட்டின் 'சூப்பர் ஸ்டார்' அந்தஸ்தைத் தக்கவைத்துக் கொண்டிருக்கும் கழகத் தேர்தல் அறிக்கைகளின் பரிணாமத்தை, புரிந்துகொள்ள தவறவிடக்கூடாத நூல் இது.

...வாசிப்போம்.

## மலரும் நினைவுகள் / நறுக் — கருவூலம்

### தேர்தல் ஆய்வுக்குழுவில் துல்லிய விவரங்கள்!

1957-இல் கழகம் முதல் தேர்தலை சந்திப்பதற்கு முன்னர், கழகத்தின் 'தேர்தல் ஆய்வுக் குழு' அளித்த அறிக்கை மிகுந்த நம்பிக்கையூட்டுவதாக, உற்சாகமூட்டுவதாக இருக்கிறது என அறிவித்தார் பேரறிஞர் அண்ணா. "தெளிவாகச் சொல்ல வேண்டுமானால், 'கண்ணில் எண்ணெய் ஊற்றிக்கொண்டு உற்றுக் கவனித்து, தகவல்களைப் பரிசீலித்த பின்னர்தான், நாம் எல்லாம் களிப்படையத்தக்க செய்திகளை அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள்" எனப் புள்ளிவிவரங்களைக் குறிப்பிட்டார் அண்ணா.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044 - 45849900